ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1893/14 - 2014 දෙසැම්බර් මස 17 වැනි බදාදා - 2014.12.17

*1893/14 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 17 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 9/2011*

**1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டம்**

72 ஆம் பிரிவின் கீழான கட்டளை

அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படுவதும், காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறானதுமான 1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 71 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் சட்டத்தின் 72 ஆம் பிரிவால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு அதியுத்தமராம் சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இக்கட்டளையின் மூலம் இதற்கான அட்டவணையில் விவரிக்கப்பட்ட ஆதனங்களை இரண்டாயிரத்துப் பதின்நான்காம் ஆண்டு திசெம்பர் மாதம் 17 ஆந் திகதியிலிருந்து வலுவுக்கு வருமாறு 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட மக்கள் வங்கிக்கு உரித்தாக்குகின்றேன்.

மஹிந்த ராஜபக்ஷ,
சனாதிபதி.

சனாதிபதி செயலகம்,
கொழும்பு 01,
2014, திசெம்பர் 17.

**அட்டவணை**

1. மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டம் தெற்குப் பிரிவின் கொஹொன்சிய பற்றுவின் தென்னே இல் அமைந்துள்ள "புட்டுக்கவுலே ஹேன" என அழைக்கப்படும் பதினைந்து சியர் குரக்கன் அளவு கொண்ட அதாவது, உத்தரவுபெற்ற நில அளவையாளர் கே. குமாரசாமி என்பவரினால் அளந்து வேறாக்கப்பட்ட 1964.08.25 ஆந் திகதிய இலக்கம் 2974 கொண்ட வரைபடத்தின் நான்கு ஏக்கர், இரண்டு றூட்டுக்கள் மற்றும் இருபத்தாறு பேர்ச்சுக்கள் (4ஏ. 2றூ. 26 பே.) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளதும் காணியின் மேற்குப் பக்கமாக அரைப் பங்காகிய, உரிமம்பெற்ற நில அளவையாளர் பி. எஸ். ஏ. குரூன் என்பவரால் ஆக்கப்பட்ட 2971 ஆம் இலக்க 1964.08.27 ஆந் திகதிய வரைபடத்தில் காணித்துண்டு இல. 1 எனக் குறித்துக்காட்டப்பட்டுள்ள பகுதி, இதன் எல்லைகள் கிழக்கு: சொல்லப்பட்ட 2971 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டுள்ள இக்காணியின் காணித்துண்டு இல. 2 ; தெற்கு: அலவத்துயாயே தோட்டமும் ஹீனகமுவாவின் தோட்டம் மற்றும் பாரன் சிங்கோவின் தோட்டமும் ; மேற்கு : கட்டபிட்ட தோட்டமும், வடக்கு: முவாகல தோட்டமும், இதன் விஸ்தீரணம் இரண்டு ஏக்கர்கள், ஒரு றூட் மற்றும் பதின்மூன்று பேரச்சுக்கள் (2ஏ. 1றூ. 13பே.) மற்றும் இதிலுள்ள வான் பயிர்கள், செய்பயிர்கள் மற்றும் அதற்குரித்தான சகலதும்.

இக்காணியானது, மாத்தளை காணிப் பதிவகத்தில் 252/201 என்ற பக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

*2. சப்ரகமுவ மாகாணம், கேகாலை மாவட்டம், கல்பட கோரளை துன்பலாத பற்றுவிலுள்ள மோரகம்மன மற்றும் கட்டபேரிய இல் அமைந்துள்ள வேரகல ஹேனா என்றழைக்கப்படும் மூன்று பேல நெல் காணி இடப்பரப்பும், மகாலிந்த தோட்டம் ஒரு பேல ஐந்து குருணி நெல் காணி இடப்பரப்பும் மற்றும் இரண்டு பேல நெல் காணி இடப்பரப்பும் கொண்ட "மகாலிந்த தோட்டம்" என அழைக்கப்படும் காணிக்கு அடுத்ததாகவுள்ள காணி. உரிமம்பெற்ற நில அளவையாளர் ஏ. சீ. எஸ். டீரெக்ஸ் என்பவரால் 1951 ஆம் ஆண்டு யூன் மாதம் 22 ஆந் திகதி ஆக்கப்பட்ட 2628 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டவாறு இதன் எல்லைகள் - வடக்கு : குடா ஓயா, தன்கெதர தோட்டம் மற்றும் குருகொஹோ தோட்டம் ; கிழக்கு: சியம்பலா தோட்டம் ; தெற்கு : அரனாயக்க தோட்டம் மற்றும் அல்ஹேன; மேற்கு : கல்பொக்கே தோட்டத்தைப் பிரிக்கின்ற கல்பொக்கே கால்வாயும் மற்றும் கட்டபேரி கால்வாயும். விஸ்தீரணத்தில் எட்டு ஏக்கர்கள், மூன்று றூட்டுக்கள் (8ஏ. 3றூ. 0பே.) கொண்ட காணி. இதன் மேற்குப் பக்கத்தில் கட்டபேரி கால்வாய்க்கு அருகில் செங்கற்களால் அமைக்கப்பட்டுள்ள ஓட்டு வீடும் அவ்வீடு உள்ள பகுதியில் பிரிவிடல் செய்யப்படாத முக்கால் ஏக்கர் விஸ்தீரணமான காணியும் மற்றும் அதற்குரித்தான சகலதும் சேர்த்து.*

*சொல்லப்பட்ட காணியானது, கேகாலை காணிப் பதிவகத்தில்* C *547/84 என்ற பக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.*

*மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரளை, பல்லே பத்துவில் பாம்பெகெஸ்பெவ கிராம சபை எல்லையினுள் மாம்பெ கிராமத்தில் அமைந்துள்ள "பட்டதொம்பகஹலந்த" என அழைக்கப்படும் காணியின் உரிமம்பெற்ற நில அளவையாளர் கே. ஆர். பி. பெரேரா என்பவரால் 1960, சனவரி மாதம் 09 ஆந் திகதி ஆக்கப்பட்ட 264 ஆம் இலக்க வரைபடத்தில் பிரித்தொதுக்கப்பட்ட காணித்துண்டு இல. 4 எனக் குறித்துக்காட்டப்பட்ட காணி. இதன் எல்லைகள் :- வடக்கு: பொது வீதி ; கிழக்கு : எச். சீ. சைமனுக்கும் மறுபேருக்கும் சொந்தமான பட்டதொம்பகஹலந்த தோட்டம் ; தெற்கு : காணித்துண்டு இல. 3 ; மேற்கு : காணித்துண்டு இல. 3 ; இக்காணி விஸ்தீரணத்தில் பதினைந்து தசம் நான்கு மூன்று பேர்ச்சுகள் (0ஏ.0றூ. 15.43பே.) கொண்டதும் மற்றும் அதிலுள்ள வான்பயிர்கள், செய்பயிர்கள் மற்றும் அதற்குரித்தான சகலதும் சேர்த்து.*

*சொல்லப்பட்ட காணியானது தெல்கந்த காணிப் பதிவகத்தில்* M *1770/247 என்ற பக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.*

*01- 140*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.